
தத் சத்.

முத்துக்காமாட்சியம்மன் துணை.

ஸ்ரீமத் சிவானந்த சற்குரு தேசிக மூர்த்திகள் நீடுவாழ்க.

ஸ்ரீ சற்குரு பாமாலை.



ACC NO:- 359847

—: இயற்றியவர் :—


காளையார்கோவில் செல்லப்பசுவாமிகள் பரம்பரை இளையாங்குடி ஸ்ரீமத்சிவானந்த சற்குரு தேசிக மூர்த்திகளின் சீடருள் ஒருவரும் பெருநாழி சர்வமத ஐக்கிய சாது சங்கத்திருக்கூட்டத்தில் ஒருவரும் பெரியண்ணலவர்கள் தவப் புதல்வருமாகிய

சின்னமுத்து என்ற சச்சிதானந்தம்.

சின்னுமாநகரர்.

KOVIKOOR AND
A. No. 35987
LIBRARY, KO

ஓம்.
தத் சத்



இயற்றியவர்.

திரு. சின்னமுத்து என்ற சச்சிதானந்தம்

சின்னுமாநகரம்.

27-3

இயற்றியவர்

திரு. சின்னமுத்து என்ற சச்சிதானந்தம்

சின்னுமாநகரம்



முகவுரை

சிறப்புற்ரேங்கும் தமிழ் பாண்டி நாட்டில் நெல்லை மாவட்டத்திலே ஓர் பகுதியாகிய சின்னு மாநகரத்திலே சான்ரேர் மரபிலே பெரியண்ணலவர்களுக்கும் வேலம்மையாருக்கும் மகவாய் தோன்றி பள்ளியில் சம்பளஞ் சுவடிகளின்றி பழகி வருங்கால் ஒருநாள் அடியேன்

தாய் விரத நாள் வந்ததும் பூவரசன் இலை பிடிங்கி தைக்கவென உத்தரவிட்டனள். உடனே சோளயீக்கியும், இலையும் பல்லினுல் கீறிக் கடித்து இலை தைப்பதைப் பார்த்த தாய் ஓடோடியும் வந்து கையை ஓங்கிப் பயலே என்ன செய்தாயென்று மெள்ளக் கன்னத்தில் அடித்து பயமுறுத்துபவள் போல் சைகை செய்து விரத இலையை எச்சிலாக்கினுயே நீ பின்னுல் பெரியோர்கள் சாவகாசம் பெருவனல்லவா என்றும் பல உபசாரஞ் சொல்லி உன் சாதகப் பலன் அறிவாளிகள் கூட்டம் நீ தங்குவதாய் உன் அப்பா சொன்ன விசயம் என்று அந்த இலை மாற்றி வேறே இலை தயாரிச்சுச் சாப்பாடு செய்து அது முதல் பள்ளி செல்லவில்லை. இது தெரிந்த தாய் நாட்டுப் போக்குக் கதைகளும் பின் அனந்த விடுகதைகளும் பாரத ராமாயணம் திருவிளையாடல், தொண்டர் பெரிய புராணம் இன்னும் பல பழகிய நூல்கள் யாவும் தந்தையார் அன்போடும் எழுத்தறிவிக்கவும் பல நூல்கள் வாங்கி அர்த்தப் பியாசம் செய்து சைவத்திருக் கூட்டத்தில் வியாபகம் ஊட்டிய காலத்தில் சற்குருநாதன் திருவருள் நேரில் கிடைத்தது. அது முதல் தாய்சொன்ன வேகமே சத்தியமாய்க் கூட்டி வைத்து சற்குரு பாமாலை செய்து 20 ஆணடுகளாய் விட்டது. அது முதல் இன்று வரையும் தாமதப் பட்டதைப் பற்றி விரைவில் முடிக்க ஆரம்பம் செய்து அடியேன் வணக்கமாய்க் கொள்வது.

சாத்திர மென்செய நமக்குத் தக்கமயலளித்த பிரான்
தோத்திரமே அமையுது சும்மேலோச்சும் முல்க்கா

பெருநாழி செ. மு. அகமதுதாஸ் அவர்கள்

இயற்றிய சாற்றுக் கவி

27-3

வெண்பா

சிற்பரமானந்த சிவானந்த திருத்தேசிகன் மேற்
சற்குரு பாமாலை தனைச் சாற்றினன்— அற்புதமாந்
தென்னகத்து நற்பொதிகைத் தேசிகனுமாய்ந்துணருஞ்
சினன முத்து அடிகளுறைச்சீர்.

உ

ஓம் தத்சத்

பரப்பிரக்கணேரம்

ஸ்ரீ -இந்திரா வதார நல்லூர் என்னும் இளையான் குடியின் கண்மகோன்னதமாய் விளங்கும் மறை முடிவாச்சிரமம் - என்னும் வேதாந்த மடாலயத்தில் ஸ்ரீ - சற்குரு மூர்த்தமாய் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ - மகா சன்னிதானங்களாகிய ஸ்ரீ சிவானந்த ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் மீது -சிவானந்த புரமென்னும் சின்னு மானகரத்தில் வசிப்பவரும் மேற்படி ஞானுச்சாரிய சுவாமிகளது சீடருள் ஒருவருமாகிய சின்ன முத்தடிகள் என்னும் சச்சிதானந்த சுவாமியவர்களாற் பாடியருளிய ஸ்ரீ -சற்குருபாமாலை

இது எழுதியது இராமநாதபுரம் ஜில்லா - அருப்புக்கோட்டை தாலுகா, திம்மநாதபுரத்தில் வசிக்கும் ரா. தனுக்கோடியா பிள்ளை என்ற அப்பூதி அடிகள்

உ

சாத்துக் கவிகள்

கோவில்பட்டித் தாலுகா குளத்தூர் சு. ரெ. சின்னச்சாமிக் கவிராயரவர்களி யற்றியது

விருத்தம்

பன்னூலின் வளங்கள் மிக வாய்ந்துணர்க் துணர்ந்தோன்
இல்லறத்திற் பற்றென்றுலும்
தொன்னூலின் படியே வேதாந்த சிவத்தொண்டர்குழுத்
துணை கைக் கொண்டோன்
முன்னூலின் வழியே நற்கவியுரைப் போன்தற் பெருமை
மொழிந்திடா தோன்
சின்னூரில் வளர்சு முகன் பெரியண்ணன்மால்
தவத்துச் சேயனென் போன்

விருத்தம்

படைத்திலங்கு கடவுளுக்கு மேலாக நெஞ்சமதிற்
பதித்து மாசு
துடைத்திலங்கு சற்குருவை மறவாமல் பாமாலை
தொகுத்தானுள்ளத்
தடைத்து வைத்த பாசமதை வெளிக்காட்டிச் சச்சிதா
னந்த மென் போன்
கிடைத்திலதிக் கவிபோல வேறென்றிங் கெனப் புகழுங்
கீர்த்தியோனே

விருத்தம்

ஷெயார் -தம்பி -சிவனய்யா சுவாமிகள் இயற்றிய சாற்றுக் கவி
விற்குருது ரோணனுக்கன்றே கலைவன் விரலீந்த
மெய்மையே போல்
பொற்குருவை யுளத்திருத்தித் தினந்துதித்தே யாங்கவரின்
புகழைப் போற்றச்
சற்குரு பாமாலையெனும் நூலிசைத்தான முதமெனத்
தரணி போற்ற
வெற்கொருசி நேக சச்சிதானந்த மாயனெனு
மிசை வல்லோனே

கட்டலக் கலித்துறை

பெற்றோரைக் கூட மதியாரிக் காலம் பிறவிப் பயனற்றோடச் செய்த குரு பாசங் கொண்டேயவர் சரணம் பற்றுகச் சற்குரு பாமாலை சொற்றுன் படியதிலே கற்றோர்கள் போற்றிடுஞ் சச்சிதானந்தக்கவிக் கடலே

உ

ஓம் -தத்சத் சற்குரு பா மாலை

சீர்பெருங்கயிலை நாதன் செங்கண்மால் பிரமன் வஸ்டன்
பார் புகழ் சத்தி தேவர் பாரசார் மறை வியாசர்
தார் புனை சுகர் தெய்வீக சந்ததி வரு செல்லப்பர்
ஏர் புகழ் சிவானந்த மென் றெண்ணிலா மறைகள் சாற்றும்

குருபரம் பரை

தேங்கு நிறை கையிலையுற்ற தேவதேவனுந்
தெக்ஷிணமூர்த்தி சனகர்
திகழ் மறை வியாசர் சுகர் கௌட பாதாசார்யர்
செய்யகோ விந்த பகவர்
பாங்கு பெரு சங்காரசாரியர் சுரேசுரர்
பதினொருவர் பின் மரபினர்
பழமறை விளம்பும் வித்யாரண்யர் சுப்ரமண்யர்
பாரிதலசப்பர் முத்தி
தாங்கமமும் ஞான மதுகந்த லிங்கேசுரர்
தருமரபில் முத்தி ராம
தகமை யருணாசலர் சிதம்பரரும் ஆன்ம நிலை
தன்மையருள் ராம சாமி
நீங்கறிய கானலம் பதியில் வளர் செல்லப்ப

நீதிபரர் நித்த சுத்த
நிஸ்கள சொருபகுருதற்பர சிவானந் தா
நின் மலர் பதம் பணிகுவாம் 2
உலக நிகழ் புகழ் கொண்டு செய்கின்ற கரமியத்
தொருகோடி தவமுயன்று
உம்பர்பத மெய்தியப் போக விலை பெற்று நாள்
ஒய்ந்து தவமாய்ந்து வீழ்ந்தும்
பலக விதை முகர் மேல் பாடியென் கூடியென்
பாரில் நீ பெரிய பெரியனெனவே
பந்தப் பிராந்தருலகாய ரெமை வாழ்த்தும் நெறி
பாழ் நரகில் வீழ்த்து மன்றோ
அலகிலுயிர் சிவநேச அருள் கொண்ட குருபரற்
கடிபேணி அல்லல் தீர்ந்தார்
அன்று சுந்தரர் பரமனருளிலறு பான் மூவர்க்
கடியனென்றடி மைநதார்
சிலைதனுவெனத்திரி புர மெறிய மெச்சுருச்
சிவ பரஞ்சுடரிளசையில்
சிவானந்த மாகியருள் வடிவாயமர்ந்த குரு 3
திரு வடிக்காளாமினே

கா - செ - அருணசலசுவாமிகள் துதி

மறை முடிவாஙகானப் பேர்க்காளீசர் செல்லப்ப வடிவு தாங்கி
முறை தவார மடாலயத்தில் வேதாந்தக் கொடியேற்றி முமுச்சு
வின்பால்
அறைகூவிப் பொருளுணர்த்தும் பரமகுரு கால் வழி வந்தமல ஞான
நிறைதவனும் அருணசலம் முனிவன் பொன்னடி யென்னெஞ்சில்
வைப்பாம்

உ

சற்குரு மாலை

நால்வர் துதி

மனமாசு துடைத்த பிரானருளைப் பாட
மங்கைபால் தூது கொண்டான் மலர்த்தாள் போற்றி
தனமழுந்தஞானப் பாலருந்துங் காழிச்
சம்பந்தப்பிள்ளையார் சரணம் போற்றி
கனமான சிலையாழி மிதப்ப மோக்ஷக்
கறைமேவு திருநாவுக்கரசு போற்றி
வனமுலையாள் பங்கனேடெழுதக் கோவை
மலர்ந்துரைத்த வாதவூரடிகள் போற்றி 5

குருவென்ப தென் உட் பொருள்

குருவெனும் பொருளுக் கர்த்தம் குகரமஞ்ஞானமத்தை
மருவியரு கரமென்னும் ஞானத்தால் மாய்த்துப் பின்னும்
குரைவில் சீருபயவர்த்தங் குணரூபவதீத மென்று
திருமறை முடியில் நின்று சிவானந்தம் அருள் மாவாக்கே 6

தெக்ஷணமூர்த்தியே சற்குரு

அருமறைப் பொருளை நால் வாக்கால மர்ந்தங் கை காட்டி
இருளறத் தெளிவித் தாண்டயெம் பிரானிளசை வந்து
முருகனுதியனுல் வர்க்கு முடி பொருளுணர்த்து
குரு சிவானந்த மூர்த்தி குறைகழல் முடி மேல் வைப்பாம் 7

வாழவத்தம் மன் துதி - கட்டளைக் கமசிதுத்துரை

கல்லு - முருகக் கட்லெழும் - ஓலங் - கரக்கப்பவ
அல்லுக்கு - ஞான - விளஞ்சூரியன் போல மந்திளசை
வல்லமெய்த் - தொண்டரடி - போற்றும் - வாழவந் -
தாளதொழும்பர்
செல்ல - தவிர்ச் - சிவானந்த - மாகித் - திகழ்ந்தனனே 8

அடியார் வணக்கம்

வாழி மறையந்தணருஞ் செங்கோல் வாழி
மஞ்சன் புத்தூர் வைஸ்ய மரபென்றென்றும்
வாழி நென்முளை வாரியிறை வற்கன்று
வல்லமுதுவு வந்தளித்த மாரன் கோத்ரம்
வாழி சற்குருபணி செய்பாணு முனுக
கமீது பர வள்ளல் வகை மற்று முற்றும்
வாழி யிளையான்குடி சற்குரு பாமாலை
மடாலயஞ் சூழடியரெலாம் வாழ்க வாழி 9

சிரவணமே சற்குரு தோத்திரம்

அழிப்பது நல்லோரருள் பெரும் ஆசியே
விடுப்பது தீயோர் விரும்பிய வுறவே
கொடுப்பதுள்ளன் பின் கொடையே கொடையாம்
படிப்பது சற்குரு பா மாலைதானே 10

அறுபத்து முவர் துதி

எத்தலத்தும் இறைவனை ஏத்தியே
பத்தியெதிப்பரவிப் பின்ருள்
முத்தி யெய்தும் முதலடியாரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம் 11

உ

காப்பு - வெண்பா

பூமாது நாமது பொன் துளங்களிக்க
மேன்மேலுஞ் சென்னல் விளைவோங்கும் — மாமிளசை
யம்பதி வாழ் சற்குரு பாமாலை சொல ஐங்கரத்து
கம்பமதக்குஞ் சரன்ருள் காப்பு

சற்குரு வணக்கம்

மண்முதற் பூதமைந்து வான்ரவிப்பியமான் சேரமன்
கண் முதற்புலன் களந்தக் கரணமும விளங்கு மெத்தால்
எண்ணு மெக்கலையுங் காலம் இயங்குவ தெத்தாலந்த
உண்மையாஞ் சிவானந்தப் பேரொளியிணை யுளத்திற்
கொள்வாம் 1

நூல்

சிவ சிவாயென முன்னன் பாய்ச்சிந்தையில் நினைக்கச்சென்மப்
பவ மெலாந்தொலையு மென்று பண்டுறை செய்தாயெந்தாய்
சிவசிவாயென முன்னுதைத்திரு வருளளித்ததேவே
சிவசிவானந்தமான தேசிக மணியே போற்றி 2

பூக்களாலெனது நாதன் பொன்னடி போற்றப் பூவின
சேக்கையின் மணமும பின்னைதிரியு மென்றடியேனிந்த
ஆக்கையைப் பெற்ற பேறு அடைவதற் கருளானந்த
பாதகளால் சிவானந்தத் தேன் பருகிடப்பாக்யம் பெற்றேன் 3

சத்தியமென்பார் பொய்யர் சத்திய மறியார் வீணில்
பாத்தியஞ் செய்து நாளும் பவத்திலே யுழல்வர் மூடர்
முத்தி சத்தியமாய்த்தந்த முதல வனைத்துதிப் போர் நல்ல
சித்தியும் பெறுவார் இம்மை சிவானந்தம் பெறுவார்தாமே 4

பூவுறை புத்தேளாதி முனிவரும் புலவர் சித்தர்
யாவரும் போற்றுங் காணப்பேர் தனில் இறை செல்லப்ப
தேவ தேசிகனுல் நல்ல சிவானந்த நாமம் பெற்றுச்
சாவதும் பிறப்பு மற்ற தன்மையை யடைந்தாய் போற்றி 5

ஊசலுங்கரங்கும் போல் மெய்யோய் விலாதுழலுகின்ற
ஆசையில் மனனின்ருட அயர்வுறும நாயேன் தன்னைப்
பாச மதறுத்துவுள்ளப் பதைப்பையுன்ருளில் வைத்துத்
தேசினையளித்துக் காத்த சிவானந்த குருவே போற்றி 6

பருதி வந்தெழு முன் ஞாலம் பற்றிய யிருள் போல் ஞானக்
குருவருளிலாவ ஞானக்குருட னுயுழன் ருேர்க்கினபக்
கருணை முன்னுன் மொன்ருய்க்க வின்றரும வடிவுதாங்கித்
திரு வடிமுடியிற்சூடுஞ் சிவானந்த குருவே போற்றி 7

கண்டசொர்ப் பொருக்ளெல்லாங் கனவுறுங் காக்ஷி போலாம்
அண்ட வாழ்பத முன் செய்த வறத்தின தழ்வா மென்று
பண்டு நான் முகனுமாலும் பதமுடி காணுவண்ணல்
தொண்டனையாளவந்த சுந்தரகுருவே போற்றி 8

சிந்தனை வாக்கிற் கெட்டாச் சிவ பரஞ்சுடர் கானப் பேர்
வந்தமர்ந்திளசை தன்னில் வழி வழி தொழும்பு கொண்டு
பந்தமதறுக்கும் ஞானப் பரமமாஞ் சேது தன்னில்
இந்துதோய் சிவாசிர மத்திலிருந் தொளிர் குருவே போற்றி 9

எல்லாமாயிருக்கு மென்னை ஏழையேன் மதியினுலே
இல்லை யாயலந்தேற் கெனனையென்னிலே யிருத்திப் பேதம்
அல்லவாயாகசி நாளும் அகம பிரமாஸ்மியென்னுஞ்
சொல்வதத்து விதமாய்ச் சொல் சுந்தர குருவே போற்றி 10

சகம் பரசீவரென்று சாற்று முப்பொருளை நீயுன்
அகம் பிரமத்திலாக்கி அவித்தையைய விப்பாயென்று
சுகம் பெறவருளியாண்ட தூய சற்குருவே யுன்னை
யுகந்தோதும் பரவி வந்தவுண்மையால் காணப்பெற்றேன் 11

மாயிருள் கழிய வின்பவான் கதிர் பரப்பும்ஞான
ஞாயிராயுதஞ் செய்த நற்பரம் பொருளேயீன்ற
தாயினுஞ் சிறந்து மோக்ஷத்தன்னருளளித் தாயேழை
நாயினுங் கடையேன் செய்ந்தற்றவம் யாவர் பெற்ருர் 12

ஏனமாயனமாய்ப் பாதம ஏழில் முடிகான வேதன்
வானமால் பூமி போந்தும் மதிக் கொணுத்தி ரோபவத்தால்
ஆனனமைந்தான் தில்லையம்பல விட்டுச் சேதுத்
தானமிங்கிருக்கை கண்டால் தாள் முடிகாணலாமே 13

முன் பல பிறப்பில் செய்த முழுத்தவப் பேற்றுலன்றே
இனெனெடும் பிறப்பில் நாயேன்ஏளிதினி லடைந்தேனின்றுள்
என்னில தவருற்றுலும் ஏழையேற் கருள் செய்யின்றேல்
பின்னையெற் கருள நீயும் பிறந்திட வேண்டுந்தேவாய் 14

கடலெலாம் வற்றி நாலுங்கன் மாரி பொழிந்திட்டாலும்
வடவரை முடி சாய்ந்தாலும் வடதெற்காரவியுற்றுலும்
படபடத்துறுமிச்சண்டன் பாசத்தாற் பிணிப்புற்றுலும
திடமொடு சிவானந்தா சான் சீரடி மறவேனென்றும் 15

விண்ணவர் அயன்மால் வந்து வேத பாடங்கள் கேட்பப்
பண்ணவர் முனிவர் சித்தர் பாத பூசைகள் செய்தேத்த
அண்ணலங் கடியார் வந்து அரகரவென்று பாட
திண்ணிய சிவயோகத்தில் சிவானந்தன் அரசிதாமே 16

௨

வேறு

அசை காட்டும் ஊசலென விடை மதிலுலை மனத்தை
யடக்கியின்ப
நசை காட்டிச் சாதனமேதறியாத நாயேற்குப்
ஞானநூலின்
இசை காட்டித் திருவடிதந் தென்னையெனக்குக்காட்டி
எழாது சிந்தை
திசைகாட்டுங் கருவியைப்போல் சிவானந்தர் பொன்ன
டியென் சிந்தையைப்போம். 17

உலகுதனிற் பிறந்திறந்து வுண்மையிலாப் பெறுந்
தர்க்கமுயன்று மூர்க்கர்

கலகமிசைப் புரண்டுதிரி நாயோர்க்குக் கடைக்கணி
துக்கருணையோடும்

சவனமலி பொருளெல்லாம் நீயலவென்றேயுணர்த்
தித்தணையே காட்டும்

உலகுகந்த தேசிகனுஞ் சிவகுருவை யென்னுளும்
உட்கொள்வேனே 18

மறை மொழியங்கண்ணி செவிகேட்ப்ப புகன்ற
வுரை மறந்தாளாகப்

பரதமகளா கென்னவலே வீசி மண முடித்த
பரமன்தானே

பிறைநதி கொன்றையுங் கரந்து யிளசையிலவங்
தன்பருக்குப் பிரஞ்ஞானந்தம்

பிரமமெனும் நிலையுணர்த்துஞ் சிவானந்தசற்
குருதாள் பேணி வாழ்வாம் 19

உலகபரஞ்சீ வரெனக்கு வித்திருந்த கோதுகளை
யொதுககியள்ளி

இலகு அகம்பிரமமெனும் எரியினிடை அவித்தி
டுவென்றி யினிசையாமோன

நல்மிகு செங்கரத்தினுற் காட்டியருள் சிவானந்த
நாதா நின்பேர்

நிலம் பரவியிருந்தாலும் வுணருறுமோ நீ சொன்ன
நெறியையம்மா 20

வெந்தயத்தைப் பச்சிலையிட்டம் பொன்மயமாக்கு
தொழில் விதம்போல் நாயேன்

பந்தமலக்குடிலக நிர்த்தூளனஞ் செய்தான்ம
வொளிபரவச் செய்தாய்

சந்தமறை தேடறிய தாளடியேன் முடியிருத்திச்
சாந்தியாக்கி

சிந்தையகம் பிரம்மெனும் நிலையுறை செய் சிவானந்த
தேவே போற்றி 21

பிரியமொடப் பிரியமெனும் பிரியாபிர்யம் பேதமற
நடப்பவனே பிரமநோக்கின்

திரமறிவான் மற்றயற் கெத்திறத்திலுமே வரா துண்மை
தெளியு மாங்கம்

அறனறிந்த சாத்திரங்கள் அனந்தங் கோடிகள் படித்து
ம்அமையாதென் று

திருநகை கொண்டருள் முகத்தாலடியேற் கென்னிலை
யுணர்த் துந்தேவே போற்றி 22

கங்கை முதலாயுள்ள தீர்த்த மெலாமூழ்கியறன்
கழல் பூசித்தும

அங்கணர்தன் பிரசாதம் பெற்று நீள்புகழ் வேண்டி
யறஞ் செய்தாலும்

எங்குமா நிறைந்த பரம் அடியார் துயர் நீக்கவென
இளசைவந்து

தங்கு சிவானந்தகுரு தாள் நினையார்தன் பிறவி
தணிப்பதுண்டோ 23

ஆதிகயிலையை நீங்கிக் கானப் பேர் வந்திள
சையமர்ந்து நாயேன்

பாதியில் மும்மல மகற்றிப்பசு பாச மகற்றியருள்
பரமதாதா

சேதுநிகழ் பர்வதவர்த்தனி யருளால் சிவாச்சிர
மஞ்சிறப்பஞான

சோதி வடிவாயமர்ந்த சொரூப சிவானந்தனருள்
தொழும்பனயானே 24

யோகமதை யறிதல் பரமோக்ஷ மெனரேசக பூரகத்தில்
நின்று

பாகமதை யறியாது கும்பித்துப் பொறிசிதறப்வித்
திட்டாலும்

தேகமதை நித்தமெனும் லோகாயர் சுருதியிது
சோகம் நீங்கார்

சோகமெனும் பாவணையே அத்து விதம் என்ருசான்
சொல்மாவாககே 25

சீவபரசகத்துகளைப் பகுத்தறிதல் ரேசக மொத்திரத்
திரத்திஞேர்க்கும்

மேவியகம் பிரமமெனும் பூரகமாம் விசாரணை
மெய்யகத்தில் நின்று

பாவகஞ்சின் மாத்திரமே கும்பகப்பேர் சமாதி நிலை
படர் வேதங்கள்

தாவரிய சிவானந்த சற்குரு தாள் முப்பொருட்குஞ்
சாக்ஷியாமே 26

இடும்பையுறும் அவித்தை வசத் தேழை யேனுன்னடிப்
போதிறைஞ்சு மன்னுள்
கடும்பிறவித் தொடக்கறுத்துக் கண்பார்த்துங் கைதட-வி
விக்கறுத்துட் கொண்டேன்
சடம்பயில் வாதனைத்திறள் முன் தலைசாயச் சச்சிதா
னந்த மென்னத்
திடப்பெறவே அருளியெனையாண்ட சிவானந்த
குருதிருத்தாள் போற்றி 27

வேறு

தேடரும்பிள்ளை பல பயந்தாடன் சேயொரு பிணி
யுற மருந்து
நாடுவள் கொல்லோ மூடனென்ற யிர்த்து நழுவுமே
வீயென விடுத்துப்
பாடுறும் நீயே தந்தை தாய் நாயேன்
பவப்பிணிய கற்ற மார்ச்சாலந்
தேடிய நியாயமாக வந்தருள் வாய் சிவானந்த
தேவ தேசிகனே 28

அருந்தவமில்லா ஒருவனை மனையாள் அடியிணைத்
தொண்டு செய்தாற்றிப்
பெருந்தவ மெல்லா அடைகுவ ளென்று
பேசிடும் மறைகள் மெய்ஞ்ஞானம்
அருக்தென நாளும் அருள் குருவடிவாய்
அமர் சிவானந்த நற்பாதம்
பெருந்தன மெனக் கொண்டுறைந்திடு மென்பர்
பெரும் பயன் பேசுமாறுளதோ 29

இனமணிக கோவை கன மிட்டறணியும்
இளமுலை மாதர் தன்மயலும்
கனமாதிய புன் வேட்கையு மகன்று
கருத்தசையாது மெய்யுணர்வின்

தனமென நாயேன் தவமெனஞான
சற்குருவாய மெய்யடிவைத்
தினஞ்சிவானந்த தேசிகன் தாளைச்
சீர்பெறவணங்கி வாழ்த்திடுவாம் 30

கதிரவன் குணபால் எழுமுனமெழுந்து
கண்டுயில் நீத்து நீர்படிந்து
விதிஞன் மலர் கொண்டுன்னடி பரவும்
விருப்பமே நாயினேற் கருள்வாய்
நதி மதி கொன்றை வேணியுஞ் செங்கை
நவிமழுதுடியுமுன் கரந்து
நிதிதுனும் இளசையமர் சிவானந்த
நிருத்த தேசிக சிகாமணியே 31

மருமலர்க்குழல் மென் சொல்லியாக் கடிமை
மருவிடா நெறியெனக் கருள்வாய்
கருணைமுன்னுன்கு வோருவாய
கடையனேன் தன்னை வந்தாண்ட
குருவடி வான குணமணி விளக்கே
கோதிலாஞன வாரித்யே
திருவடி முடிமேல் சூட்டிய தேவே
சிவசிவானந்த தேசிகனே 32

சோமனும் பருதி சீவனோடைந்து
துன்னுமுற் பூதமாய் நிறைந்து
தாமுறைபட்ட மூர்த்தமாய் நிறைந்து
தனிப்பரஞ் சுடரொளி வாய்ப்பி
நாமமும் ரூபமிகந்து சத்சித்தாய்
நவையில் பேரானந்த முதலே
ஓமெனும் பொருளே இசை வந்தடியேன்
உள்ளமேகுடி கொண்ட குருவே 33

தாறுபாசாண மிருத்து தாம் பிரத்தில்
சத்தியப் பொருளினைக்கருதி
வேறு வேருய நாமரூ பங்கள்
விளம்பியார்ரிதனை புரிவான்
நாரலர் கொண்டு தீண்டலாரகி
நவைபெறக் காண்பவர் கருத்தில்
ஆருணையறிவார் சிவானந்தா உன்றன்
அடியிணைத்துகள் பெரும்பேறே 34

நஞ்செனும் விழியாரவா விடைப்பட்டு
நாடிடும பொருளெலா மறந்து
பஞ்செனும் நொய்ய நூல் பல படித்துன்
பதமலர் காணிய வலைந்தேர்க்
கஞ்சமென்ற பயகரதலங் காட்டி
அடியனேற்கருள் விழி காட்டி
செஞ்சொலாரணத்தின் முடியில் நின்றுளும்
சிவானந்த தேசிக மணியே 35

பிள்ளை செய்குற்றந்தாய் பொறுப்பது போல்
பெரும்பிழை பொறுப்பதே பெரியோர்
உள்ளம் நேர்மனைவி நட்பினர் கயவர்
வுறுபிளை பொறுத்தல் போலுலகில்
எள்ளுறுயிடமும் பிரிவிலாப் பொருளே
ஏழையேன் பிழை பொறுத்தாள் வாய்
தெள்ளு நீர்வயல சூழ் இளசையில மர்ந்த
சிவானந்த தேவதேசிகனே 36

மோச்சத்தலம் 5-தில் -குருபணி உயர்வு

காசியிலிறக்கர்க் காஞ்சியைத் துதிக்கக்
கனக நற்பொது நடங்காண
நேசமாரூரில் பிறந்திடலருணை
நினைத்திட முத்தியாந் தெளியில்

தேசம் விட்டிறக்கப் பேசிடக்காணச்
சௌித்திட நினைத்திடலைந்தும்
தேசிக ஞான குரு சிவானந்தன்
திருவருள் நோக்கினுறப்யக்கும் 37

வெண்பா

சிவானந்த - மென்றெருகால் - செப்பியபே - ரெல்லாந்
தவானந்தப் - பேரடைந்து - தானுய் - பவமகல
முத்துவித - மத்துவிழ - முப்பொருளுஞ் - சத்தியமாய்
அத்துவித - மாவா - ரறி 38

முத்திக் கொழுந்தே - முழுமுதலே - மூவாசை
எத்தியிடரறுக்கும் - என்கோவே - சித்தி
தருஞ்சிவா - னந்தாவுடன் - தாடலையின -மன்னி
இருந்தால் - குறைவேது - மில் 39

எண்ணெண் - கலையும் எழுத்தும் - இலக்கியமும்
பண்ணமைந்த - வேதம - படித்தாலென் - எண்ணில்
அவா விகந்த தேசிகன் சொல் - அத்துவிதத் - துய்க்கும்
சிவானந்த - வாக்கே -தெளி 40

கரணம் பதிநான்குங் - கண்டறிந்தால் - சென்ம
மரணந் - தொலைக்கு வழி - வாய்க்கும் - தருணமிது
வந்தசிவா - னந்தகுரு - வள்ளலுன் - வாழ்மொழியே
சொந்தமலால் - வேறு முண்டோ - சொல் 41

சீரார் - கயிலைவிட்டு - செய்ய புகழ் - கானப்பேர்
நேரா- யமர்ந்திளசை - நின்றுமே - பேர்பெறவே
நின்ற - சிவானந்த - நிலைமையறிந் - தத்துவிதங்
குன்று - தளிதத - குரு 42

சித்தர் புகழ் - கானப்பேர் - செல்லப்பா - தேவபர
முத்தர்பால் - வீற்றிருக்கும் - மூர்த்தியே - பத்தருக்காய்
வந்திளசை - தன்னிலுறை - வள்ளலுன் - வாய் மொழியே
செந்த மென்மார்க் - கேது - துயர் 43

ஏகப் பொருள் மூன் - றிருமூன் - றொருமுறை
ஏக - விடுத்தொரு மூன் - றேகமாய் - சோகமற
நின்றேழ் - புவியைந் - தவித்தை - யதுநீங்கி
நின்றே சிவா - னந்த நிலை - நேர் 44

வெள்ளி - வரை விட்டு - வேதமலி - கானப்பேர்
மெள்ள - வமர்ந்திளசை - மேவியே - உள்ளம்
பவாச்சிரமம் - நீக்கியிடப் - பாவீமாஞ் - சேதில்
சிவாச்சிரமம் வந்தமாந்த தேன் 45

கல்லெறியும் வில்லடியுங் காலடிபட் டுந்தொழுமபர்
செல்லல் தவிர்த்த சிவானந்தம் வல்லபுகழ்
பத்தருளத் தெத்தை நிணைந் தந்தையளித் தத்துவிதம்
முத்தர்தொழ நின்ற முதல வன் 46

மனவாக் ககோசரமாய் மாண்பாம் புதையல்
தனம் நாயேன் கோசரிக்கத் தந்து கனமான
ஆக்க மளித்தசிவா னந்தகுரு வாதரவின்
பாக்கியம் பெற் றோர்க்கென் பயம் 47

வேறு - கட்டளைக் கலித்துறை

சத்தத்தி லச்சிய மென்னுன் வடிவு துணையறிந்தால்
அத்து விதப்பொருள் தானுவந் தெய்வம் அறிவிதுகாண்
சத்திய நான்மறை யுச்சியில் நின்று சகம்பரம்
சித்துரு வாயசி வானந்த தேசிகன் செப்பியதே 48

சாட்டை யெறியுண்ட பம்பரம் பெற்றறி யேநசைவத்
தாட்டப் பொறிபறை நாடக சாலை யகிதமெலாம்
கட்டி நடிக்கும் மனமென்னுங் கள்வன் குறும்பகற்றி
தேட்ட மளித்துச் சிவானந்த வீட்டில் சிறைப்பட்டனே 49

என்றும் அடியேற் குலகிற் றுணையிலை யேழையினேன்
அன்றுன் னடிதுணை நீங்காது போற்றி அயர்வொழிந்தேன்

குன்றவில் - ஏந்தியே - முப்புரங் - காய்ந்த - குலவுதில்லை
மன்றுள் - நடிக்குஞ் - சிவானந்த - தெய்வ - மணிவிளக்கே 50

ஆராதா வில்லை - நின்னையல் - லாதுன்னடியனுக்கே
வேரா - தரவெனக் - கென்பய - ஞதம - வெளிமயக்கே
தீராத - நெஞ்சத் - துயர்தனைப் - போக்கியென் - சிந்தையின்கண்
வாரா - ளைசையமர்ந்த - சிவானந்த வாரிதியே 51

பொன்னை - யணைவியை பூமியை - நாடிப் - புகழுகில்லேன்
நன்னூ இலக்கண - காவியம் - நீபுகழ் - நாடுகில்லேன்
உன்னிரு - தாள்பணிந் - தேத்துந் தொழும்பர் தொழும்பனுமாய்
அன்னை பிதாவென வுன்றனைப் போற்றுவன் ஆண்டருளே 52

கட்டளைக் கலித்துறை

தவமேமுயன்றெரு - கோடிசெய் - தாலுமுன் - சார்வறிதாஞ்
சிவமே திருவருள் - கொண்டு - எழுந்து சிவானந்தமாய்
பவமே - யறுத்தினை - யான்குடி - வந்துன் - பதம் பணிந்தால்
நவநா - யககோள் - தருதீங்கு ஒன்றுமட - நமக்கிலையே 53

அறஞ்சார் நெறியும் அதிதிகள் பூசையும் அன்பு மன்றி
புறஞ்சார் நெறியோரு கோடி செய் தாலும் பெரருளலவாய்
பரன்சார் குருபரன் சேவடி நாளும் பரவுவர்க்கே
திரஞ்சார் கெதிமுத்தி யென்று சிவானந்தம் செப்பியதே 54

பாடும் - புனுவல் - பலவோதி - ஞலென் - பவந்தெறுமோ
நாடும் நதிபல தீர்த்தங்க ளாலென் னலந்தருமோ
ஆடும் பொழிற்றில்லை யம்பல வாணன் அருள்வடிவே
தேடும் பொருள் மறை தேடுஞ் சிவானந்தஞ் சேவடியே 55

சங்கம் புகழ் தமிழ் சார்கம்பன் போலுட் தமிழ்ப்புலவீர்
அங்கம் பலவுழல் செல்வரைப் பாடி அலைகுவதேன்
எங்கும் நிறைந்தருள் ஆனந்த சோதி இளைசைநகர்
தங்குஞ் சிவானந்த தேசிகன்றுள் மலர் சாற்றுமினே 59

நவக்கிர காதி கலிக்கோடை வந்து நவியுமன்னுள்
புவிக்கெழுந்தையான மதி கொன்றையும் போக்கியருள்
துவக்கொழுந் தஞ்சலளித் தெமையாண்டு சுகமளித்த
சிவக்கொழுந்தாய சிவானந்த ஞான சிகாமணியே 57

எதுதொழில் கோடியியற்றினும் ஒன்றும் எனக்கிலவாய்க்
கர்த்தா கரணங்கிரியை பலமெனக் கண்டிடுவாய்
சத்தாமறிவு சகத்காரணமன சாக்ஷியதே
தத்தோ மஸியென வுண்மை சிவானந்தம் சாற்றியதே 58

வேறு

உன்னையன்றிச் சிவபரமுலக மில்லை யென்பதனை
என்னேகாணு நாயடியேன் யேழை மதியால் கெட்டலைந்தேன்
பொன்னையன்றிப் பூசணங்கள் பலவாய்த் தோன்றி பொன்போல
உன்னையறிந்தேன் சிவானந்த வெளியே வுளத்தின் பெருவாயே 59

உலகில் மகவு செய்யுங் குற்றம் வொறுப்பதறியார் தாய் தந்தை
அலகில் நாயேன் செய்யுங் குற்றம் அனந்தும் பொறுத்து அருள்மேனி
உடலிலகத்திருப்பாது கைதந்து யிளையா வின்ப மெனக்களித்தாய்
தி திலகநுதலோய் சிவானந்தத் தேனே தைமாறுளதேயோ 60

ஆதிகயிலையாவது நீயமர்ந்த மடாலயமதாகும்
பாதி மதிகொன்றையும் வேணிப் படிவம் வுனது திருமேனி
சோதி சொரூபநின் திருதாள் துலக்கும் புனல்வான் கங்கையுமாம்
சேது நிகழுஞ்சி வாச்சிரம் வாழ் சிவானந்தப் பேரொளி தானே 61

கயலார் விழியாளுமை பாகங்கரந்து கயிலையது நீங்கி
புயலார் மழையினடுநிசியிற் பொன்னுரிளசை புகுந்துபசிக்
கியலார் வயல் நென்முளை வாரியீந்த அன்னம் புசியாத
செயலாலின்றிப் பதியமைபர் தேனுர் அன்னம் புசித்தனையே 62

காணக்கிடையாப் பொருளே துன்கழற் கால் வணங்கும் கருத்
தினர்க்கே

பூணப்பூசப் பூதிகண்டி புகழ்ப் பஞ்சாக்கர முதலாம்
பேணிச் செபிக்குஞ் செயலளித்துப் பிறவாநெறியும் பெறவைத்தாய்
சேணிற் பாரிலெண்டிசையும் சிவமாய்த்தி கழுஞ்செயலாலே 63

அச்சந்தரு பொய்ப் பிறவிதனை யகற்ற அகலவான் கங்கை முதல்
கச்சியாதிதலத் துறைந்துங்கன கஞ்சு மந்துன் பெரும்பேறு
இச்சை தீர்ந்த பெரியோரிவ் விளசையைத் துணிச்சிட்ட
பிச்சை நுகர்ந்துன்னடியிறைஞ்சப் பெருவார் பிறவிதெனுவாரே 64

பிறக்கப் பயக்கும் ஆரூரும் பெரும் பதியம்
இறக்கப் பயக்குங் காசி பொது வெய்தப் பயக்கும் நினைத்தாலும்
துறக்கமெய்து மென மறைகள் செய்வதால் நெல் முளைவாரி
சிறக்க வழுது செயுபதியுன் திருத்தாள் காணச் செயலாலே 65

செல்லு மணந்தூய்தாகச் சுகமாய்ச் சீவத்துவ மின்றி
அல்லும் பகலுன் சிரவணத்தினுறு லிங்கயுகத்தினல்
வெல்லு மனத்தோர்க்கும் பாவ விருத்தி யொடுங்கும் மேல்ஞானச்
செல்வமஞுந்து சிவானந்தத் தேனரமும் தெவிட்டிடுமே 66

வேறு

சுயிலை யீசனே கங்கையுங் திங்கள் முன்
செயனும் தீத்துச் சிவானந்த மாயெழுங்
தயலிலன் பருள் ஆரிய முத்தி சேர்
பயனெலாம் பெறப் பாதுகை தந்ததே 67

அவத்தை யைந்து தலமேழ் அதிதவாழ்
சிவத்தில் நீ சிவமாக வமர்ந்துவுன்
தவதனை பொன்வயிற்றந்து தமியேனேன்
பவத்தை நீச்கிடப் பாதுகை தந்ததே 68

தீரொணுப்ப வந்தீர்ந்தது நாயினேன்
பேரொணுப் பெருவாழ்வு பெற்றேன் சிவ

வாரணுசியில் அன்று வழங்கிய
கார ரணுதிருப்பாதுகா காக்ஷியே 69

பூவெடுத்துன்றன் பொன்னடி போற்றிலேன்
நாவெடுத்துச்சிவா வென்ன விற்றிலேன்
பாவெடுத்துப் பழமறையுச்சி வாழ்
சேவடித்திறஞ் செப்புந்திரத்தனே 70

எட்டும் விட்டு மற்றெட்டு மடைந்தவர்-எட்டு விடையப் பஞ்சா
எட்டு மூர்த்தமும் எட்டுக்குணமது-ஷெ அட்டமுதி பேருற்றல்
எட்டுமாதிரம் எங்கு நிறைபொருள்-மாதிரம் திசை
எட்டும் இம்மை சிவானந்த மென்பரேல்-ஷெ கிடைக்கும 71

முந்தையோர் சொல் சிவவென் மொழிகுவோர்
முந்தைவன் வினே முற்றும் வொழியும் பின்
சிந்தையாரச்சிவ சிவாயென்பரேல்
எந்தை தேசிகனின்னருள் செய்வனே 72

கட்புலன் மனங்காணுதல் ரேசகம்
பெட்பமைந்து பின் வாங்குதல் பூரகம்
உட்புலனில் வொடுங்குதல் கும்பகம
திட்பமா குஞ்சிவானந்த போதம் 73

சகம்பிரம மெனுமுறை ரேசகம்
அகம் பிரமமெனுமுறை பூரகம் நகம்பரவு சின்மாத்திரை கும்பகம்.
செகம்பரவு சிவானந்த போதமே 74

வாசிகட்டி வலமிடமுஞ்சுழி
நாசியுச்சியை நாடுவரென கொலோ
காசி செல்வர் கனகஞ்சொ ரிந்துமென்
தேசிகேசன் திருவடி தேர்கிலார் 75

பாடுவார் பலர் பாவனஞ் செய்துபின்
ஆடுவார் சிலர் காமிய ஆட்டங்கள்
மாடமாரிளசை புகுந்துன் கழல்
தேடுவார் பிறப்பற்ற தெளிஞரே 76

என்னையாண்ட இறை வனிளசைவந்
தன்னைதந்தை போலாண்டருள் வான் பிறர்
மன்னுமாண்மையுஞ் செல்வமு மற்றுயிர்
தின்னவந்ததிருடர் தெளிமினே 77

கன்மகாண்டிகளுங் கடைத்தேறவே
சென்ம சாவல்யமாக்குன் திருவடித்
தன்மை சொல்லத்த மியன்புன்னுவினுல்
என்ன காண்பன் சிவானந்த எல்லையே 78

சோதியப் பிரகாசவுன் சுந்தரப்
பாததாமரை பட்டயென் நர்ச்சிரம்
ஆதலாலுன்னருந்தவப் பேற்றினுல்
ஒதயெந்தனுள முந்துணிந்ததே 79

ஏதுமேயறியாத இளஞ்சிருர்
ஓதும் வார்த்தையு வந்து றுந்தாய்மை போல்
கோதிலுன் புகழ் சொல்குரு மாலையை
யீது நன்றென யேற்றருள் செய்குவாய் 80

வெள்ளிமால் வரை யீசன் வெருவுறத்
தள்ளி மாலயன் தன்னை மயக்கிடுங்
கள்ளமாயையுன் கால் பணிந்தோடுமே
பிள்ளையுன் புகழ் பேசுந்தரத்தனே 81

எட்டு மால் வரையேந்து மிப்பூமியுள்
அட்டமங்களமாக வமர்ந்தெனைத்
தொட்டபாவந் துலைத்த சிவானந்தம்
இட்டமுன்றனிருபதம் வாழியே 82

வாழி நான் மறையந்தணர் மாதவர்
வாழி தெக்ஷிணுமூர்த்தி வழி முறை
வாழியே அறுபான் மூவர் வையகம்
வாழி நால்வருமெ வாழி நூல் வாழியே 83

வாழி வேதசன் மார்க்க சங்கத்தினர்
வாழி செல்லப்பநாதன் மலரடி
வாழி யேகாதிபத்திய மனு மன்னன்கோல்
வாழி ஞானமறை புகல் மாந்தரே 84

ஆனைமாமுகன் ஐமுகன் சண்முகன்
பானலங்கனி வாய்மொழி பார்வதி
ஞானசற்குரு நல்லருள் பெற்ற மெய்ஞ்
ஞானசீட ரனைவரும் வாழியே 85

சற்குருநாதன்-இரட்டைமணி மாலை

காப்பு - வெண்பா

மாயிருளை ஞானமெனும் வாள் வீசிப்பேரமுதம்
தாயின் வியந்தூட்டுஞ் சற்குருமேல் நேயமுடன்
பாவாலிரட்டை மணி மாலை பகரவருள்
தாவாகணபதி யுன்ருள்

கட்டளைக் கலித்துறை

காயாதி மூன்றிற் கலந்த வினையாங் களஞ்சியத்தை
மாயா வதிக்கிச் செல்விட் டருளா மதிகொடுத்து
ஆயா நிலையெனும் ஞனமு தத்தை அளித்துள்வென்
தாயாய் நயக்கும் சிவானந்த தேசிகன் தாள் துணையே

வெண்பா

துணைத்தாள் விரும்பியவென் சோகமெலா மாற்றி
இணைத்தாள் தொழும்பரோ டென்னை அணைத்தாள்
செல்வ மலியச் சிவானந்தத் தேனெழுகுங்
கல்வி தருவாய் கனிந்து

கட்டக் கலித்துறை

கனிக்கு நிகர்மொழி மின்னார் மயலைக் கடந்திறப்புஞ்
செனிக்கும் யிருவினைப் போகமு நீத்துச் செகவிருளைப்
பனிக்குளிர் நீக்கும சிவானந்த மென்னும் பரிதியெழ
சனிக்கு மனமயில் நீக்கிடுஞ் சற்குரு சன்னிதியே

வெண்பா

சன்னதி கண்டுன் வான் சரண் புகுந்த மெய்யடியார்க்
கென்னகுறை சற்குருவினின் னருளால் தன்னியனே
அய்யமிலை மெய்நா னலமருநாள் கண்பார்த்துக்
கையாலோர் சொல்லுரைத்தக்கால்

கட்டளைக் கலித்துறை

காலந் தங்களும் வேண்டுங்கொல் நாயேன் கவியிற்ற
பாலன்முன் கூற்றை யுதைத்தகாலொன்று பலவலவே
மூலமென் ஸ்ருதிய பாஞ்சாலிடி யானைக்கு முன்னின்றருள்
நாலா மறைமுடி நின்ற சிவானந்தம் நற்பதமே

வெண்பா

பதம்போற்றும் நின்னடியார் பாதுகையான்-சூட
நிதங்கனவில் வந்தடியேன் நெஞ்சில் இதம்பெறவே
பூதி கொடுத்தருளப் பூரித்தேன்-பொன்னடிக்கீழ்
காதல்பெற வைத்தல் கடன்

கட்டளைக் கலித்துறை

கடம்ப வனந்திகழ் தென்கூடல் வந்தடி காணுமன்னுள்
மடம்பயில் வஞ்சப் புலன் மாற்றிச் சாதன வாழ்வளித்து
குடம்பையுள் கீடமுன் தன்னுருவாக்கு குளவியென
உடம்பினுள் சச்சிதானந்த அந்தமென்ஸ்ருதிய-வுள்ளொளியே

சற்குரு ரெட்டை மணி மாலை

வெண்பா

உள்ளுக் கிருந்த தனை யுன்ற நாயடியேன்
கள்ளப் புலன் மனத்தைக் கட்டவிழ்த்தாய் உள்ளத்தில்
நந்தா வொளியனைய நாதா யிளசைச்சிவா
நந்தா வெளியனையே நாடு

கட்டளைக் கலித்துறை

நாட்டனந் தங்களுஞ் சென்ருலென் சென்ம நலிந்திடுமோ
பாடும் பனுவல் பலவோதினுலென் பவந்தெறுமோ
மாடஞ் சிறந்த இலிசை மடத்தின் மறைமுதவன்
தேடுங்கழலே போருளாகுஞ் சென்மமுந் தீர்ந்திடுமே

வெண்பா

தீருமே சென்மஞ் சிவானந்த மென்ருெருகால்
கூறினுற் பாவங் குறையுமே-யாருமே
சொன்னுலும் இன்பார் சுவைத்தாலுங் கன்னலரசம்
பின்னையமு தல்லவோ பேசு

கட்டளைக் கலித்துறை

பேசுவ துன்பே ரெழுவா யிரண்டெழுத தாகுமிதை
ஆசை துறந்த பெரியோய் மொழிந்தபஞ் சக்கரமே
பாசந் துறக்க வழியிது வாகுமுன் பங்கயத்தாள்
தேசு திகழப் பரவுவார்க் கிங்கொரு தீங்கிலையே

வெண்பா

தீங்கில்லை சொன்னேம் சிவமென் றிரண்டெழுத்தில்
ஓங்கார முன்வைத் துருக்கொடுத்தால் ஆங்கதுவே
சேர்க்குஞ் சிவகுருதாள் சிந்திக்குஞ் சிந்தையது
ஆக்ககுஞ் தெரியா தது

கட்டளைக் கலித்துறை

அதுவிது வெள்த்தர்க் கத்து விதமா யகிலமெல்லாம்
பொதுவாய் நிறைந்த சிவானந்த தேவனின் பொன்னடியே
நிதமிதச் சொல்மலர் சாற்றிப் பரவியென் னெஞ்சமென் றும்
இந்தயா லயத்தில் வைத்துப்போதுங் கண்டுனை யேத்துவனே

வெண்பா

யேத்துவே னின்ருள் இறுத்துவேன் னெஞ்சகத்தில்
தூத்துவே னுன்னுமந் துன்பமெலாம் மாற்றுவேன்
என்னிச்சை யீதாம இனைசைக் கிருநிதியே
உன்னிச்சை யீதா யுரை

கட்டளைக் கலித்துறை

உரையுணர் வுக்கு அதீதமென் றேமறை யோலமிடும்
தரையுளடியார்க் கருள்வான் குருலிங்க சங்கமுமாய்
இறையள வென்னகம் நீக்கமின் றிச்சுக் மெய்துதர்கு
உன்றசெய் யெனமறை யோதிச் சிவோக மென்றேதியதே

வெண்பா

1 ஓதக் கடலமுதம் வுண்டவர்சீ விப்பருன் வாய்ப்
3 பிறவிறுமோக்ஷம பிறப்பிக்கும் ஞானம்
2 போதவுணர் யார்செவியிற் பூந்தாலும் சாதல்
4 தருஞ்சிவா னந்தாவுன் சால்வு

கட்டளைக் கலித்துறை

சால்பு தனையறியாம லுழலு மெத்தன்மையரும
மேன்மை யுடைய சிவானந்தம் நற்பத மேவிவிட்டால்
கால்வீச வோடுந் துரும்பதைப் போலவர் கர்மவினை
மாலோடுஞ் செய்ய மரைமலர்ப் பாதார மான்மியமே

வெண்பா

மான்மியத்தை யேயறியா மாந்தரெல்லாம் வுன்திருவாய்
தேன்மொழியைக் கேட்டுத் தெளிவடைந்து மேன்மையிலா
எத்தனையோ சென்மம் யெடுத்தபிற விக்கடலைத்
தத்திக் கரைசேர்வார் தான்

கட்டளைக் கலித்துறை

தானென் றகங்கரங் கொண்டே பவக்கடல் தானழுந்தி
யானெங்கும் ஓடி அலையாம லுன்றன் அகிருத்தி
மீன்கொண்ட செங்கண் மதுரரசை யாள வெருவொழித்து
தேன்கொண்ட வாக்கை யடியேற் கருளிய தேசிகனே

வெண்பா

தேசிகனே ஞானச் சிவானந்தத் தெள்ளமுதே
வாசி நிலையறி வல்லவனே பூசிதவுன்
பாதார விந்தம் பரவும் அடியேற்கு
ஆதார மாய்நின் றருள். முற்றுப்பெற்றது

வேறு சந்தம்

சாத்திரங் கற்றாலும் சூத்திரம் அறியாத மனிதரும் வெரும் சாவி
காத்திரம் உள்ளபோதுண் ணேத்திரம் அறியாத மனிதரும்
[பெரும்பாவி
சேத்திரமிருந்தாலும் சேத்திரம் அறியாத மனிதரும் வெறுஞ்ம் சாவி
சோத்திரமிருந்தாலும் தோத்திரங் கேளாத மனிதரும் பெரும்பாவி
சத்துவம் பெற்றாலும் வித்துவமில்லாத மனிதரும் வெருஞ் சாவி
தத்துவங் கற்றாலும் வத்துவை அறியாத மனிதரும் பெரும் பாவி
பத்தியம் செய்தாலும் சத்தியமில்லாத மனிதரும் வெறுஞ்சாவி
நித்தியநாதனை நித்தமும் நினையாத மனிதரும் பெரும் பாவி
கற்பவை கற்றாலும் நிற்பவை அறியாத மனிதரும் வெருஞ்சாவி
நிற்பவை நின்றாலும் சற்குருவடையாத மனிதரும் வெருஞ்சாவி

காத்திரம்-உடல் சோத்திரம்-காது பத்தியம்-பக்தி
சேத்திரம்-ஆத்ம

இத்தோடும் சற்குரு பாமாலையும் ஷி இரட்டை மணி மாலையும் முற்றுப் பெற்றது.

— இனிமேல் —

சர்வ தேவாலயக் கலிவெண்பா வருமாறு காண்க.

உ

முகவுரை.

மூவர்கள் தேவாரம் பாடியருளிய தலம்.

பாண்டி நாட்டிலே பாடல் பெற்ற தலம்	14
சோழ நாட்டிலே காவேரியின் வடகரையில்	63
ஷ சோழநாடு தென்கரை யிலுள்ள தலம்	127
ஈழநாட்டிலே யுள்ள தலம்	2
மலைநாட்டிலே யுள்ள தலம்	1
கொங்குநாட்டிலே யுள்ள தலம்	7
நடுநாட்டிலே யுள்ள தலம்	22
தொண்டைநாட்டிலே யுள்ள தலம்	32
துளுவநாட்டிலே யுள்ள தலம்	1
வடநாட்டிலே யுள்ள தலம்	5
ஆக பத்து அயிடமும் சேர்ந்த தலம்	274

இத்தோடும் சிவபதியாயுள்ள தலங்கள் கீழ்வருவன.

பாண்டி நாட்டிலே மதுரை வட்டம் சிவபதி	154
சோழநாடு தென்பாகம் காவேரியின் தென்கரை	103
சோழநாடு கீழ்பாகக் காவேரியின் தென்கரை	195
சோழநாடு மேல்பாகம் காவேரியின் வடகரை	101
சோழநாடு வடபாகம் சிதம்பரம் வட்டம்	77
சேரநாடு மலைநாடு கொங்கு நாடுகள் கந்தர்த் தலம்	111
நடுநாடு தென் ஆற்காடு ஜில்லாவும் வட ஆற்காடு ஜில்லாவும் தென்பாகமும் திருவண்ணாமலை வட்டம்	64
தொண்டை நாடு என்பது சித்தூர். செங்கல்பட்டு. சென்னை பட்டினம் வட ஆற்காடு ஜில்லாக்கள் திருக்காளத்தி வட்டம்	133
வடநாடு ஸ்ரீ காசி அயோத்தி முதலான சப்த நகரங்கள்	374
தேவாரம் பாடிய தலங்களோடும் முன்பின்கூடிய புண்ணியபதி	1312

மூவர்கள்பாடிய தேவாரம் 103000- அதில்செல் போக இறுப்பு 749- பாடல் பெற்றதலம் - 274 - ஒட்டுத்தலம் 7- ஆகத்தலம் -281 குள் 749 பாடலை ஈடு கொடுத்து ஆங்காங்கு சென்றும் வைப்புத்தலம் 160 இதில் பிரபலமானதலம் - 60 - 597 புாரணமுள்ளதலம் 12 - ஆள்வார்திகள் மங்களரசனம் திருப்பதி 108 - புாரணதலம் 100 -பிரபலமானதலம் -16- இன்னூங்கந்தர் தலம் ஆறுதிருபதி மலைநாடு முதலானதலங்களும் -சமைய பேதமாயுள்ளவைகள் மக்கம் 1 எறிசலம் 2- புத்தர் 3- சமணர் 4 தர்க்கர் 5 லோகாயுதன் - இன்னும் பலகூட்டமும் - நேரில் பாரத தலம் வைப்புத்தலம் யென்றும் மற்றவைகள் நேரில் சென்று பாடியதலம் 274 - ம சேத்திரக் கோவைகளிலும் இன்னும் முக்தித் தலங்கள் அனேகம் உண்டு அந்தப்பாடல்கள் சிதலெறித்துச் செல்லாய் விட்ட படியால் அவைகள் தோன்றப்படவில்லை இவை விளங்கும் மாறுஎன் சிற்றறிவுக்கு எட்டியபடியும் குருநாதன் அனுமதிப்படிம் சற் குருநாதனோடு காசி முதற்கன்னிபரியந்தம் தெய்வ யாத்திரை செய்து தமிழ் நாட்டில் தனியாத்திரையும் செய்து வந்து சென்ற பிலபவ வருசம தை மீ 21. தெய்தியில் 8. கிரகம மகரராசி யில் கூடியகாலம் இக்கலிட வெண்பாவெனப் பெயர் வைத்து எழுதிய நூல் சற்குரு பாமாலையோடுசேர்த்து அச்சிட்டவைகாண்க அடியேன் இப்பாடலை இலக்கண இலக்கியம் தெரியாமல் தெய்வ அனுமதியைக் கொண்டும் மனவூக்கமா யெழுதியது பிள்ளைகள் சொல்லும் இழுக்கு வார்த்தைக்கியார்தான் சந்தோசப்படாதா பொருள் கொடுப்பவர் பாமரர்களைப்பற்றிப் பாடவில்லை பேரறி வாழர்கள் ஆதரவுக்கும் நிந்தைக்கும் அடியேன் சந்தேசப்படுகிறேன்

உ

சர்வதேவாலயக்கலி — வெண்பா

சர்வதேவாலயத்தின் சால் புரைக்க முந்தியருன்
சர்வகணபதியுன்ருள்

குலதேவதைகள் வழிபடு

குல முதல் வியதாய் நின்ற குலவு காமாச்சி வாழி
அலமருதெனைவந்தாண்ட அம்மை செல்லமுத்து வாழி
மலமெலாம் அகற்றி முத்தி வழங்கு சற்குருதான் வாழி
தலமதில் விளங்குந் தெய்வஞ்சகலமும் வாழ்க வாழி

விவேகானந்தர் என்னும் வாத்தியார்குப்புசாமி பிள்ளையவர்கள் இயற்றிய சாற்றுக்கவி — காடல்குடி

கட்டளைக்கலித்துறை

பூவாலயத்துறுவேதன் படைத்திட்ட பூவுலகில்
காவாலயத் தெழிற்சின்னூர்ப்பகுதியாங் கடிநகரில்
நாவாலயத் தவன சச்சி தானந்தமாநற்றவத்தோன்
தேவாலயக்கலி—வெண்பாவியற்றினன் தித்திக்கவே

வெண்பா

தேவாலயக் கலி — வெண்பாவதனைச் செந்தமிழில்
நாவினுல் சச்சிதானந்தனவில் — பாவுறைக்கில்
ஐவகையின் வேட்கை யகற்றி மனச்சாந்தமாய்த்
தெய்வமணம் வீசுஞ்சிறந்தது

சீரருந் தெய்வதலச் சேவைதனைப் பாவுரையில்
பாரா யணஞ்செய்யும் பாவனையில் பேரருந் 1
ஆதி கயிலை அரனயன்மால் தாமிருக்கும்
சோதிமய மாயுலகில் தோன்றுதலம் யீதெனவே 2
சொல்லுங் கலி—வெண்பாத் தோத்திரம் தாயுறைக்க
வல்ல கணபதியே வந்திருள்வாய் அல்பகலாய் 3
வெள்ளைக் கமலமதில் மேவு கலைவாணியென
துள்ளக் கமலத் துகந்திருப்பாய் தெள்ளுதமிழ் 4
வல்லசிவ மெய்யடியார் வாளுமறுபான்முவர்
வல்ல திருவடியை வாழ்த்தியே பல்வழமும் 5

பூண்ட புவனமெலலாம் பொங்குசிவப் பேரொளியாய்
ஆண்டவன்வாழ் சேத்திரமாம் யாத்திரையில். நீண்டபுகழ் 6

காசிமுதற் கன்னி கழுக்குன்றங் தென்பொதியம்
பேசப்பயக்கும் பெரும்பதியும். பூசலனூர் 7

சங்கரனூர் கங்கவரை சாத்தன் அருணைநல்லூர்
திங்களூர் ஐயார் திருப்பதியும். மங்களனூர் 8

பூவண்ணங் கானப்பேர் புல்லணைமங் கைசுழியல்
நாவுண் ணவகோடி நற்றீர்த்தம். ஆவலுடன 9

ஆடிப் பவந்துலைத்து அண்ணல் மேசர்கழல்
தேடிப் புனவாயில் சென்றடைந்து. நாடி 10

முதுகுன்று ஆடானை முன்னவன்கா ளத்திப்
பதிமகா லிங்கம் பழனி. மதிமுத்தம் 11

வில்லி புத்தூர் ரப்புடையார் வேட்களமு நாச்சியரர்
வல்லந் திருநறையூர் மாயூரம். அல்லல் 12

கழியுந் திருவாரூர் கண்ணபுரம் புத்தூர்
பழநாகூர் சிக்கள் பயற்றூர். பழையார் 13

திருமருகல் சாத்தமங்கை சீர்காழி நள்ளார்
திருநாகை யூரழப்பூர் தேவூர். திருக்கடையூர் 14

காரைக்கால் வேட்டகுடி கைலாச நாதபுரம்
பாரில்செங் காட்டகுடி பாபப லியூர். சூரியனூர் 15

கோவில் திருப்பனந்தாள் குற்றாலம் ஆடுதுரை
முவல். தருமபுரம் மூளையூர். கோவிற் 16

குளமுங் தளிச்சேரி கும்பகோ ணனூர்
வளமாருந் தக்களூர் மையம். களக்காடும் 17

பல்லவழுங் காவிரிப்பூம் பட்டினமுங் கண்ணகலும்
வல்லதிரு வெண்காடு வாஞ்சியமும். நல்நிலமும் 18

வீழி, மிழலையன்னூர் விற்குடியும் நற்பனையூர்
வாழிதிரு வாழூர் வலிவலமும். கீழூர் 19

திருவா வடுதுறையுஞ் செம்பொன் வடலூர்
திருவேடகத்திருநெல் வாயல் திருக் தறுகை 20

ஈசனூர் குண்டையூர் யெட்டிகுடி கன்றுப்பூர்
வாசவை குண்டம் மணிமாடம் நாசிக்கு 21

அரிமேய விண்ணகரும ஆணைக்கா வொற்றி
திருமணநல் லூர்திருக்க டாவூர் திருக்கொடிக்கா 22

கோனேரி ராசபுரம் கோவிலூ ரிந்தளூர்
கானூர் பரங்குன்று கஞ்சனூர் தேனிமலை 23

வைத்தீஸ் வரன்புன்கூர் வாழ்மங்க லக்குடியுங்
கர்த்தனருள் பூந்துத்தி கண்ணூர் சித்தவடம் 24

தாளமுடை யார்திருநா கேஸ்வரமுஞ் சாய்க்காடும்
ஆளுங்குன் றைக்குடிபொன் னம்பலமும் வாழும் 25

அகத்தியான் பள்ளி அலமேலு மங்கை
செகத்தில் கழுக்காணி செந்தூர் தகட்டூர் 26

அழியாத தென்மதுரை அய்யன் மறைக்கா
டெழிலார் விடைமருதூர் எண்கண் 27

பெருந்துறைகோ விந்தபுரம் பிள்ளையார் பட்டி
திருந்துதேவன்குடிசீ ரங்கம் பெருங்குளமும் 28

பேரூர் களாவூர் பிரம்பியமும் வின்னமபர்
ஆரூர் பரவையுண்மண் ஆதனூர் பேருதிருப் 29

பாலத் துரையனங் பத்மநா தன்திருநெல்
வேலி திருவகை வேங்கனூர் வேலூர் 30

வலஞ்சுளிகோ கன்னம் மருதூர் மணர்க்கால்
கலிங்கம் வலிவலங்கல் பாத்தி இலங்கையதில் 31

கண்டுதிருக் கேசுவரம் கோணங் கதிர்காமம்
மண்டுபுகழ் வேதிகுடி மாந்தோட்டம் வண்டியூர் 32

நாட்டியத் தான்குடியும் நல்லூர் திருபுலியூர்
ஆட்டியக்கும் ஆலங்கா டந்தனெடடூர் .காட்டூரும் 33

தஞ்சை திருச்சி சதுர்மறைகள் போற்றுதிரு
வஞ்சைக் களமிமைய மால்வரையும். வீஞ்சுபுகழ் 34

பாசூர் மயிலாப்பூர் பாடி பழையனூர்
காஸ்மீர் அனகாவூர் காலடியும். பேசும் 35

திருப்புகலூர் கோவூர் திருவூரல் கூவம்
திருவியலூர் சேய்ஞ்ஞலூர் திண்டி .திருப்பைஞ்ஞீல் 36

கஞ்சார் பனங்காடூ கள்வனூர் கங்கைகொண்டான்
மஞ்சார் திருமாப்பேர் வைகாவூர், வெஞ்சமரக் 37

கோடூர் அவிநாசி கோகுலஞ்சூழ் பொன்மதுரை
நீடூரும வள்ளியூர் நீலகிரி. கூடலூர் 38

வெண்ணை திருநாவாய் மேவுதிரு நாவலூர்
கண்ணைப் பதியரியூர் காரியனூர். நண்ணில் 39

திருப்பாய்த்துறைசுருளி தென்னிளசை மாத்தூர்
திருத்துறைப் பூண்டிதிரு மோகூர் .திருவலிக்கேண் 40

சக்கரப் பள்ளிகுரங் காடுதுறை சாய்க்கோட்டை
துய்க்தமழ பாடிசோற் றுத்துறையும். மிக்கபுகழ் 41

பூதலூர் சித்தவனூர் பூமிபுகழ் சின்னூர்நகர்
வாதவூர் வேளூரும் வாசிகடூர் .சீதரன்வாழ் 42

கொல்லி சுசீந்தரம் குடகுகுண பால்முதலாம்
எல்லையிலாத் தெய்வதல மீதெனவே. பல்வழிஞ்சேர் 43

இன்னும விசேடதலம் எத்தனையோ பேர்வகுத்துச்
சொன்னால் விரியு மெனத்தொகுத்து. சொர்னமலிட 44

ஏழ்பதியும் ஏழ்நதியும் ஏழ்வாரி ஏழ்முனியும்
ஏழ்புயலும் ஏழ்கன்னி ஏழிசையும். சூழ்புவியுள் 45

ஒன்றெழிய ஐம்பான் வொளிதிகழுந் தெய்வநிலை
நின்றிலகப் பாமாலை நேர்சாத்தி. மன்றிணிடத 46

தாண்டவனை நீண்டபுகழ் தாமரைக்கண் மாயவனை
வேண்டிப்பணிந்து வினைதுலைத்து. ஈண்டெனது 47

வாக்கு மனதுடம்புன் மாலடிக்கே அர்ப்பணமென்
பாக்கியமா யுள்ளம் பவுத்திரமாய். நீக்கமின்றி 48

அத்துவிதா னந்த அகண்டபரி பூரணத்தை
நித்தபுத்த சுத்த நிரா மயத்தை. எத்திசையும் 49

ஒடித்திரிந்திசைய உற்றுற்றுப்பற்பலவாய்
நாடியுறும் பல்நாமம் நாமிசைத்துக். கூட்டும் வகை 50

எங்குமிருப்பதுவாய் யெவ்விடமுந் தாங்கி
அங்கிங் கெனுதுள் அடைவாகி. திங்களொடு 51

ஆதவனென் றும்பிரதி விம்பம் அனந்தமதில்
ஓதும் பிரமத் துறுசாயை. பேதமறும் 52

சுத்தசுத்த மாயைதனிற் தோன்றச் சுரர்நாளல்
நத்துபர மேசற்கு நற்றெண்டாய். இத்தரையுள் 53

வைத்த பலசமைய வாரிதியி லேதோய்ந்து
சித்தமயல் விட்டுத் தெளிதார்க்கு. அத்தனருள் 54

மங்கலமா யெங்கும் மலர்ந்தொளிரப் பதற்குத்
துங்க வருட்பா துலங்கிடவே. அங்கைக் 55

கனியாய் அடியார் கருத்துக் கிசைய
இனிதா யவரவர்க்கு யேர்ப்ப நனியமுதாய் 56

பாடல்செயு மூவர் தமிழ்ப் பாசுரத்தை யன்றெழுதி
ஆடலுறும் அம்பலவ ஞலயத்தில். கூடமைத்து 57

வைத்துக்காப் பிட்டுநாம் வந்தால் திறப்பதெனச்
சித்கமைத்துத் தெய்வகதி சேர்ந்தன் பின். மெய்த்தவனும் 58

தெள்ளுதமிழ் நம்பி திருநாறை யூர்பொல்லாப்
பிள்ளையார்க் கன்பு பெரிதுவந்து. கள்ளமின்றி 59

ஆதியரன் பூசைபிர சாதமெல்லாம் அன்னியற்கு
தாதை கொடுப்பான் தனையனிது. பேதறியான் 60

தந்தையயலூர்புகுதத் தந்தி முகன் பூசையிணைச்
சிந்தையுவந் தேயருளால் செய்துநம்பி முந்தியுப 61

சாரமொடு பூசெபுரி சாதமளிக் கப்புசியா
நேரமுறத் தோட்டுறும் நேர்மையெதோ. நேர்மையொடு! 62

பூசைபுரி அன்னம் புசிக்கவென அள்ளியுண்டு
ஓசையுறும் நால்வேதம் ஓதுவித்துப் .பேசும்நிலை 63

அய்யமின்றிச் சோழன் அறிந்துநம்பி பாலெய்தி
நெய்யோ டறுசுவைநி வேதிக்கக் கைகளால் 64

வாரியுண்ட குஞ்சரத்தை வாழ்த்யொரு தாழ்பணித்து
தேரியருள் நம்பிதனைத் தேரேற்றி. ஊர்வலமாய் 65

வந்துதன தாசனத்தில் வைத்துயிரு தாழ்பணிந்து
சிந்தைநிகழ் மூவர்தமிழ்த் தேவாரம் .எந்தவிடம் 66

வைத்திருப்ப தெங்ஙன் வகையறிய வேண்டுமென
மெய்த்தவனும் நம்பி விருப்பமுற்று .அத்தனருள் 67

மாமுகன்பால் கேட்பான் மனந்துணிந்து நமபியருள்
நேமுகமாய்த் தும்பிமுகன் னேர்பணிந்து .பாமுறையில் 68

வந்ததிருப் பாசுரத்தை மன்னுக்குக் காட்டுவெத்
தந்திமுகன் பாதமதில் தபழ்ந்திறைஞ்ச .அந்தவுறை 69

கேட்டான் கசமுகனுங் கீழ்வடக்கி லீசானம்
நீட்டிப் புரிக்கையால் நேராக. பூட்டுதிறைப் 70

பொன்னம் பலநடன பூபதிவாழ் மேல்பாகந்
தன்னியன்கை முத்திரையுந் தானமைத்துப் .பொன்னுலகு 71

சென்ருர் நீ மன்னனுடன் சென்று பொன்னம்பலத்தில்
குன்ரு நிலைமை குறிவைத்து .இன்று போய் 72

கையாற் றழுவக் கபாடந் திறக்குமென
அய்யப்பா டில்லா தடிவணங்கி . உய்யும் நிலை 73

தேரியறிந்த நம்பியுடன் மன்னவனுஞ் சென்று பொது
நேரில் நடனபதி நேர்பணிந்து .மேருவில்லி 74

நல்விழாக் கண்டு நடனபதி பூசைமுற்றிப்
பல்மறையோர் போற்றப் பணிந்திறைஞ்சி பொல்வாத 75
பிள்ளையார் நல்லருள் பெற்ற பேளை திறந்திடவே
உள்ளங் களிகூர்ந்து துவகையுடன் தெள்ளுதமிழ் 76
வன்மீகம் முடுதலை மன்னவன்கண் டம்மலையை
தன்கையால் நீக்கித் தமிழ்மறை அன்பிருக்க 77
கண்டார் சிதலெரிப்பக் கண்ணீர் ததும்பவாய்
விண்டார் மனமழன்று மெய்சோரத் தொண்டர்பிரான் 78
வாதிடல்நீ தெய்வ மறைப்பொருளை வைத்துதவாப்
பாடல் கழித்தோம் பதருதே நாடறியக் 79
கல்மிதக்கும் வாரிதனில் காசிநல்குங் குண்டையூர்
நெல்லளிக்கும் பொல்லா நெருப்பவிக்கும் கொல்யானை 80
மாருய் வணங்குவிக்கு வல்லாறு ஆறளிக்குஞ்
சோறுதவும் அல்லிற் றுணை கூட்டும் மாறுபடும் 81
புத்தர் தலை தத்தும புனலெதிரே யேடு செல்லும்
அத்தனைத்தூ தாக்குமணி யாற்றிடும் முத்திரையிற் 82
பொன்னைக் குளத்தளிக்கும் பொல்லா விசங்கணிக்கும்
தென்னன் சுரந்தணிக்குஞ் செங்கல்லும் பொன்னுய் 83
அளிக்கும் யெலும்பைப் பெண்ணுக்குங் கராமுன்
களிக்க மதலையைமுன் கக்கும் தெளித்த மறைத் 84
தெய்வக் கதவத் திறந்தடைக்குஞ் சென்னெறி வாழ்
வெய்தச் சமணர்கழு வேற்றுவிக்கும் வெய்யகொடும 85
பேய்களும் சூலை பெயர்ந்தோடிங் கண்ணளிக்கும்
நோய்களும் நொய்ய பனிதவிக்கும் ஆய்வகையில் 86
ஆண்பனையைப் பெண்பனைசெய் தாக்கும் அருந்தவத்துங்
காண்பறிய கைலாயங் காட்டுவிக்கும் மாண்புடைய 87
பிள்ளை யளிக்கும் பெருவெப்ப மாற்றிவிடும்
தள்ளறிய சத்தியத்தைச் சான்ருக்கும் பிள்ளைக்கு 88

முத்துச் சிவிகையொடும் முன்தாழம் பொற்சின்னம்
அத்திட்ட கூறைசெம்பொன் அன்றளிக்கும் சுத்தநிலை 89

கல்யாண வேள்வி கலந்தபெருஞ் சோதியிலே
எல்லோரை யுந்துறக்க மேற்றுவிக்கும் வல்லபுகழ் 90

வெள்ளாணை தன்னுடனே வெண்பரியு மஞ்செழுத்தை
விள்ளக் கயிலைதனில் மேவிக்கும் உள்ளதென 91

அய்யன் திருவாக் கமுதமெனச் சோழனுங்கேட்டுடைய
மகன்று அகமகிழ்ந்து செய்யவனு 92

பூதி கொடுத்துப் புவனமெலா மீடேறச்
சோதி விளங்கச் சுகமளிக்கும் நீதியுறும் 93

பாசுரத்தை மூவரன்று பல்லா யிரமாக
ஆசையுற்றுச் சொன்ன ரதன்பெருமை பேசக்கேள் 94

லச்சமு வாயிரங்காண் நற்பாடல் செநீக்கி
எச்சமெமு நூற்றேடு யேழேமும் மெச்சும் 95

இருநூற் றெழுபானல் ஏழ்தலமும் நேரில்
வருநூற்றுறுபான வைப்பாகப் பெருதலங்கள் 96

நானூற்று நாற்பானென ருகும் நலஞ் சிறந்த
வானேரும் போற்றியும் வாழ்வுகாண் ஆனதில் 97

ஆகும் புராணதல முன்னொழிய—ஆறுநா
றுகவளித்தார் அருள் புலவர் சேமமுறும் 98

பேராத்தலங்கள் அறுபான் பிரபவஞ் சேர்ந்-
தோரா யிரத்தெண்பா னெரெட்டுய் நாரமுறும் 99

ஆழ்வாரீ ருறுடையார் ஆயிரத்தே டாயிரமாய்த்
தாழ்வின்றி மங்களமாய்த் தானுரைத்து வாழ்வுதரும் 100

விண்டுதலம் நூற்றெட்டு மேவுமங்க ளாசனம் பின்
விண்டார் புராணசதம் மெய்மறையில் கண்டார் 101

பதினாறு முக்கியமாய்ப் பானமதிசூழ் வையத்
தத்பனேழ் தீவுக் கரசாய் நிதிபெரும் 102

நாலெலங் தீவில் நவகண்டத் திற்பாதன்
காவல் புரிந்தானிக் காசினியை சீவபதி 103

ஆயிரத்து முன்னூ ற்று யீருகிலமெலாம்
ஞாயிரொத்த சோதி நடுநிலையில் ஆயவல்ல 104

ஆதிபதினெண் புராண மதிதெய்வஞ்
சோதி பிரதிவிம்பந் தோற்றுவிந்துந் பூதிதரும 105

பூமகட்கோர் நெற்றிப் புருவமத்தி காசிபல
வாமுன் தலமே அவயவமாய்ச் சேமமுறும் 106

மக்க யெறிசலம்பின் மதிகெட்ட புத்தர்சமண்
தர்க்கன்லோ காயர் தமக்ருளி மிக்கபுகழ் 107

ஆருதா ரப்பொருளாய் ஐம்பத்தோரக்கரமாய்க்
கூராய்ப் பல சமயக் கூட்டமெலாம் வேன்றிச் 108

சொன்ன பலகோடி தோத்திரத்தி லேயனந்தத்
தின்ன லகற்றி இசையமைத்து இன்னமுதாய்ப் 109

பஞ்ச சடாஸ்ட பலகோடி மந்திரமும்
நெஞ்சி லவரவர்க்கு நேராக வஞ்சமின்றி 110

ஆத்திரத்தி லன்று அருணகிரி வேலவன் மேல்
தோத்திரமாய்ச் சொல்லுஞ் சுருதிமொழி மூர்த்திதலம் 111

அத்தனையும் யாத்திரை செய்தராய்ந் தறிந்துகன்ம
வித்தென்ப தில்லரமல் வேரறுத்து சித்தமுடன் 112

சொன்ன பனுவலிது தொல்லுலகில் பாண்டிதமிழ்
மன்னர்புகழ் சின்னுநகர் வாசத்தான் நன்னயஞ்சோ 113

சான்றோர் குலதிலகன் சற்குணவான் மெய்மறைதேர்
ஆன்றபெரி யண்ணல்வே லம்மையர்க்குந் தோன்றயென் 114

வந்துகுரு தேசிகன்றன் மாவாக்கால் சச்சிதானந்த
மெனும் நாம் நலமுற்று நிந்தைவிர் 115

சேது புகழ்பழசைத் திருக்கூட்டத் துள்ளொருவன்
வேதாந்த சன்மார்க்க வித்தையுளான் காதலுடன் 116

தன்னலத்தை யெண்ணுன் தவத்தோர்க்கு ஊளியஞ்செய்
சின்னமுத்தடியனிது தெய்வதஞ்சேர். நன்மொழியைச் 117

சொல்லியமுன் சீவபதித் தோற்றஞ் சுருதிமொழி
வல்லமையை நாயேன் வகுத்தநாள். சொல்பிலவ 118

கோளிலிருநான்கு கூடமகரமர (வு
வேழிலமர்ந்து யெதிர்நோக்க. ஏழ்புயலும் 119

பொன்மாரி யெங்கும் பொழியப் புவனமெலாம்
நன்ஞளிதுவாய் நலந்திகழச் சொன்ன 120

சர்வ தேவாலயக் கலி வெண்பா.

பனுவ லிதுகலிட வெண் பாவிலட்சைசத்தேன்
மனுவை யொருதரம்வா சித்தால். இனியசுகம் 121
பெற்றருள்செய் சற்குருவின் பேரடைவர் நல்வாழ்வு
வுற்றிடுவர் அம்மை வுறுதுயறும். மற்றுமுள 122
வாதமோடுட்கரணம் வஞ்சபஞ்ச பாதகமே
ஆதி வியாதியோ டாயபல தீதகற்றி 123
வல்ல குருசுறுதி வாக்கியத்தைச் சத்தியமாய்
நல்லவையாக கொண்டு நடுநிலையில். சொல்மறைதேர் 124
அத்துவிதானந்த அகண்டபரி பூரணத்தில்
நித்தியமாய்க் கொண்டு நிலைபெயராச். சுத்தநிலைத் 125
தத்துவா தீதமுயர் தற்பரனுய்த் தன்னிலையில்
நித்தியமாய் வாழ்வார் நிசம் 126

வெண்பா.

அங்கணநீர் கங்கை அடைந்தவுடனேபுனித
மங்கலநீராக வழங்குமே இங்கெனது
புன்பாவும் தெய்வீகப்பொனடிக்கே யாக்குதலால்
இன்பாகும் நூலே இது.

மூவர் பாடல் பெற்றிருக்கும்
தலமும் பதிகமும் பாடல்தொகையும்

பதிகம்	தலம்	மொததம்
1	153	153
2	49	98
3	28	84
4	11	44
5	8	40
6	5	30
7	5	35
8	4	32
11	4	44
12	2	24
18	2	36
24	1	24
34	1	34
71	1	71
அபி 14	274	749

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 35987